[1975 நவம்பர் 11

Appointment of Teachers with Pulavar Title as Tamil Teachers

* 104 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the Tamil Nadu Elementary School Tamil Pandits Association, requesting that the teachers with Pulavar Title working in the Elementary Schools should be appointed as Tamil Teachers in all Middle Schools; and

(*b*) if so, the action taken thereon?

புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு தமிழ் ஆசிரியர் நியமனம்

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி புலவர் கழகத்திலிருந்து இப்பள்ளிகளில் பணியாற்றுகின்ற புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் தமிழ் ஆசிரியர் நியமனம் கொடுக்கப்பட வேண்டுமென்று, அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி: ஆரம்பப் பள்ளிகளில் புலவர் பட்டம் பெற்ற பல ஆசிரியர்கள், ஏறத்தாழ ஒவ்வொரு மாவட்டத்திற்கு 120 பேர் விதம் இருக்கிறார்கள். நாம் தமிழ் ஆசிரியர் பதவிகளை உயர்நிலைப் பள்ளிகளுக்கு வழங்குவது போல், இவர்களுக்கும் அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் தமிழ் ஆசிரியர் பதவிகளை வழங்கலாம். ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில் தமிழ் கற்றுக் கொடுப்பதற்காக தமிழ் ஆசிரியர்களாக நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அது அரசின் ஆய்வில்

இருக்கிறது. உயர் துவக்கப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர் நியமனம் நாம் கொடுக்கும் சமயத்தில், இவர்களுக்கு முன்னுரிமை தரலாம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: புலவர் பட்டம் பெற்று இருப்பவர்கள் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற தமிழ் ஆசிரியர்கள். இடைநிலைப் பள்ளிகளில் படிக்கின்றவர்கள் தமிழை பிழை இல்லாமல் படிப்பதற்கும், அவர்களுக்குத் தமிழ் உணர்வை ஏற்படுத்துவதற்கும் இப்படிப்பட்ட ஆசிரியர்களை தமிழ்ப் பாடத்தை போதிக்க நியமனம் செய்தால், அது தமிழுக்குத் துணை செய்யும். தமிழ் ஆசிரியர்களை இடைநிலைப் பள்ளிகளில் நியமிக்க அரசு ஏற்கெனவே கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதை முழு அளவில் தமிழகமெங்கும் அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாப் பள்ளிகளிலும் ஏற்படுத்த வேண்டுமென்று ஆணையிடவில்லை. நிதி வசதி ஏற்படும்போது, புலவர் பட்டம் பெற்ற ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில் நியமிக்க முடியும். இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் போதிக்க முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தி வருகிறோம்.

திரு. செ. முத்துசாமி : உயர்நிலைப் பள்ளிகளில் போதிக்கப்படும் அதே தமிழ்ப் பாடம் தான் நடுநிலைப் பள்ளிகளில் 6, 7, 8 ஆகிய வகுப்புகளில் போதிக்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் இப்போது முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் இவர்களை நியமித்தால், போதாது. நடுநிலைப் பள்ளிகளிலும் நியமித்தால் நல்லது. அப்பொழுது தான் கிராமப்புறங்களில் நடுநிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களும் பயனடைய முடியும். தமிழில் பிழை இல்லாமல் படிக்கின்ற ஒரு வாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, தமிழ் ஆசிரியர் பதவிகளுக்கு அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் நியமனம் செய்ய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே எடுத்துச் சொல்லியபடி, ஆங்கில வகுப்புகளைப் பொறுத்தவரை, அப்படிப்பட்ட ஒரு பிரச்சினை இல்லை. தமிழைப் பொறுத்தவரை தான், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. இனிமேல் முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களை பள்ளிகளில் நியமிக்க வேண்டுமென்று நாம் ஆணையிட்டிருக்கிறோம். ஏற்கெனவே முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்கள் என்றும், இரண்டாம் நிலைத் தமிழ்

ஆசிரியர்கள் என்றும் பாகுபாடு இருந்தது. இப்பொழுது ஒரே நிலையாக்கி இருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டி வந்தாலும், முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களைத் தான் நியமிக்க வேண்டிவரும். இது ஒரு கொள்கைப் பிரச்சினையைப் பற்றியதாகவும், நிதி நிலையை ஆதாரமாகக் கொண்ட பிரச்சினையாகவும் இருப்பதால், திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : அந்தத் திட்டத்தின், கொள்கையின் அடிப்படையில் இதுவரை எவ்வளவு தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை.

Midday Meals Scheme

* 105 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Central Kitchens of the Midday Meals Scheme, are functioning only in Chingleput, South Arcot and North Arcot districts in the State; and

(*b*) if so, whether there is any proposal to extend this scheme to other districts also?

நண்பகல் உணவுத்திட்டம்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் மட்டுமே நண்பகல் உணவுத்திட்டத்தின் மைய சமையல் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இத்திட்டத்தை பிற மாவட்டங்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மைய சமையற்கூட திட்டத்தை தஞ்சாவூர் மாவட்டத்துக்கு விரிவாக்கலாமா என்பது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.